20 & 21 மே 2023

சமூகத் தொடர்பு ஞாயிறு

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா கால ஏழாம் ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்: குடும்ப வாழ்வு

நிகழ்வின் நோக்கம்: அனைத்துலக குடும்பங்கள் தினம்



## இதயத்துடன் பேசுவது..... “அன்பின் அடிப்படையில் உண்மை” (எபேசியர்: 4:15)

57 ஆவது அனைத்துலக சமூகத் தொடர்பு நாளை முன்னிட்டு (திருத்தந்தை பிரான்சிஸ் வழங்கிய செய்தியிலிருந்து எடுக்கப்பட்டது)

இதயத்திலிருந்து தொடர்பு கொள்வது நம்மை வழிநடத்தவும், பார்க்கவும், செவிமடுக்கவும், திறந்த உள்ளத்தோடு வரவேற்கவும் நம்மைத் தூண்டுகிறது.

இதயத்திலிருந்து பேசுவதற்கு செவிமடுத்தலும் பொறுமையோடு காத்திருத்தலும் தேவை. இது உரையாடலுக்கு வழிவகுக்கிறது. இரக்கத்தோடு அனைவரையும் மதிப்பது. ஒருவரின் காயங்களை உணர்ந்து ஏற்றுக்கொள்கிறது. வசதியாக இல்லாவிட்டாலும் உண்மை பேசப்படுகிறது.

எம்மாவுஸ் செல்லும் வழியில், உயிர்த்த இயேசு சீடர் இருவரிடமும், அவர்களின் துன்பங்களுக்கு மத்தியில், மரியாதையுடனும், முழு இதயத்தோடும் என்ன நடந்தது என்பதை, ஆழமாகவும், புரிந்துகொள்ளும் வகையிலும், அவர்களின் மனதை அன்பால் திறந்து தம் கருத்துகளை வலிந்து திணிக்காமல் அவர்கள் முன் தம் கருத்தை முன்வைத்தார். அவர் பேசும்போது அவர்களின் உள்ளம் பற்றியெறிந்தது. (லூக்கா 24:32)

400 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த புனித பிரான்சிஸ் டி சாலே, இவ்வாறு இதயப்பூர்வமாகப் பேசியவர் என்பதற்கு மிகப்பெரிய எடுத்துக்காட்டு. கத்தோலிக்க பத்திரிகையாளர்களின் பாதுகாவலர் இவர். கால்வினிஸ்டுகளுடன் கடுமையான சர்ச்சைகளை எதிர்கொண்டார். இவரது சாந்தமான அணுகுமுறை, மனிதாபிமானம் மற்றும் அனைவருடனும் குறிப்பாக இவரோடு உடன்படாதவர்களுடனும் இவர் பொறுமையாக உரையாடும் உள்ளம் அவரை கடவுளின் இரக்கமுள்ள அன்பின் அசாதாரணமான சாட்சியாக மாற்றியது.

அவரது மிகவும் பிரபலமான கூற்று: “இதயம் இதயத்துடன் பேசுகிறது” இவ்வார்த்தை பல தலைமுறையினருக்கு உத்வேகம் அளித்தது. ஆன்மாவின் பிரதிபலிப்பே உரையாடல். இது செயற்கையான ஒன்றல்ல; இன்று நாம் காணும் வணிக சந்தைப்படுத்தும் உத்தியும் அல்ல.

நமது ஆயர்மாமன்ற ஒன்றுகூடலின் பயணத்தில், தூய ஆவியானவரால் வழிநடத்தப்படும், மென்மையான மற்றும் இறைவாக்குரைக்கவும், எடுத்துரைக்கவும், கொடுக்கவும் புதிய வழிகளையும் வாய்ப்புகளையும் கண்டுபிடிக்கும் அடிப்படை திருஅவையின் கனவை நான் காண்கிறேன். இதயத்திலிருந்து வரும் உரையாடல், அனைத்து உறவுகளையும் மையமாக வைக்கிறது. அது ஒருவரின் சுய அடையாளத்தைவிட ஒருவரின் நம்பிக்கையைத் தூண்டுகிறது.

நாம் ஒருவரையொருவர் பாதுகாவலர்களாக உணர்ந்துகொள்ளவும், நமது உரையாடலைத் தெளிவாகவும், திறந்த உள்ளத்தோடும், உளப்பூர்வமாகவும், செயல்படுத்தவும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து உதவி செய்வாராக.

நமது திரு அவையிலும் மறைமாவட்டங்களிலும் உள்ள ஊடகம் மற்றும் சமூகத்தொடர்பு பணிக்குழுக்கள், நாம் கடவுளுடனும், ஒருவர் மற்றவருடனும் இணையவும் இதயங்களைக் கட்டியெழுப்பும் தொடர்புகளை மேம்படுத்தவும் அதிகமாக உழைத்துள்ளது.

நம் பங்குகளில் பலரும் தங்களுடைய நேரத்தையும், திறமைகளையும் தியாகம் செய்து இதயத்துடன் இதயம் பேசுவதற்கு உதவிசெய்வதற்காக, உழைக்க முன்வந்துள்ளனர். இன்னும் பலர் திருஅவையில் சமூக உரையாடலின்வழியாக திருஅவையைக் கட்டியெழுப்பவும், ஆர்வம் கொண்டுள்ளனர். இனியும் காத்திருக்க வேண்டாம். **ஈஸ்டர் தீர்மானமாக உங்களுடைய திருஅவையில் / பங்குகளில் சமூகத் தொடர்பு பணிக்குழுவினரைத் தொடர்புகொண்டு, உங்களை ஈடுபடுத்திக்கொள்ளுங்கள்.**




*Published by:*
**Peninsular Malaysia Pastoral Team**

திருத்தம்:
அருள்பணி யூஜின்
இயக்குனர் மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)

மின்னஞ்சல்:
apidirectorkl@gmail.com

INTERNAL CIRCULATION ONLY

BUL 21/2023